
# தமிழ்ச்சிட்டு

தரம் 25
இசை 4

விலை :
உரு. 3.00



மேழம் 2033
( ஏப்பிரல் - 2002 )

சிறுவர்
கலை
இலக்கியத்
திங்களிதழ்

## உன்னை நம்பிக் கிடக்குது நாடு!

நம்பிக் கிடக்குது நாடு — தம்பி
நம்பிக் கிடக்குது நாடு — உன்னை
நம்பிக் கிடக்குது நாடு — பெரும்
நலத்தினைச் செய்திடு வாயென நாளும் (நம்பிக்)

கும்பிக் கிலாதொரு கூட்டம் — மேற்
கூரையில் லாமலே வாழ்வதும் எண்ணி
வெம்பிக் கிடந்திடும் நெஞ்சம் —இதை
வேரொடு சாய்த்திடப் போரிடு வாயென (நம்பிக்)

துப்பின்றி வாழ்ந்திடு வோர்கள்— கேட்கும்
துணிவின்றி நொந்துகண் ணீர்விடு வோர்கள்;
உப்பின்றிக் கூழின்றிச் சாவார்—உனை
ஒப்படைத் தங்குப் புறப்படு வாயென (நம்பிக்)

ஒவ்வொரு நாளும் நினைப்பாய் —நொடி
ஓய்வின்றி உடல்பொருள் ஆவியும் ஈவாய்!
கவ்விற் றடா, இருள் நாட்டை — செங்
கதிரெனத் தோன்றி ஒளிதரு வாயென (நம்பிக்)

உன்கல்வி உன்அறி வூற்று — உன்
உழைப்பும் முயற்சியும் வாழ்க்கையும் அன்னார்
புன்னிலை மாய்த்திடல் வேண்டும் — எனும்
புத்துணர் வோடுளம் ஒத்தெழு வாயென (நம்பிக்)

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்— -1977

# தமிழ்ச்சிட்டு

**கட்டண விளக்கம்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 36.00 | 200.00 |
| தனியிதழ் | 3.00 | |
| வாழ்நாள் கட்டணம் | 350.00 | |

**தமிழ்ச்சிட்டு (சிறுவர் கலை இதழ்)**
செந்தமிழ் அடுக்ககம், மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302. தொலைபேசி : 227 0231.

சிறுவர் கலை இதழ்

குரல்–25 இசை–4

“இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**‘தமிழ்ச்சிட்டு’**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302
தொலைபேசி எண் : 227 0231

# நுண்மையாய் அறிவோம்!

நமக்குள் பலர் சில துறைகளில் சிறந்தவர்களாய் வளர்ந்திருக்கிறார்கள். ஒருவர் ஓவியம் வரைவதில் திறமையானவராய் இருக்கலாம், வேறொருவர் கதை எழுதுவதில் வல்லவராய் இருக்கலாம், மற்றும் ஒருவர் பாடுவதில், சிறப்புறலாம்.

ஆனால் இப்படியானவர்கள் குறிப்பிட்ட அந்தத் துறையில் தம்மைத் திறம்பட வளர்த்துக் கொள்வது சரியானதே.

இருப்பினும் ஒருதுறையில் சிறப்புடன் வளர்கிற ஒருவர் வேறொரு துறைபற்றிய அறிவே இல்லாமல் இருந்து வருவது நல்லது அன்று.

நமக்கு ஓடக்காரரும் பேராசிரியரும் கதை தெரியும்தானே.

கல்வி அறிவு பெறாத ஓடக்காரர் வாழ்க்கையின் பெரும்பகுதியை இழந்து விட்டதாகப் பேராசிரியர் ஓடக்காரரை இழித்துரைத்தார்.

ஆனால் நீச்சல் தெரியாததால், பேராசிரியர் தம் வாழ்க்கையையே தண்ணீர்ச் சுழலில் இழக்க நேரிட்டது.

ஒரு துறை அறிவைக் கூர்மைப் படுத்தி வளர்த்துக் கொள்வது தேவைதான்.

ஆனால், பலதுறையிலும் நாட்டம் செலுத்திப் பொதுப்படவாவது அறிந்து கொள்வதே நல்லது.

சிலர் ஒரு வேலையைச் செய்துகொண்டிருந்தால், அருகில் என்ன நடக்கிறது என்றே அறியாமல் இருப்பார்கள்.

நாம் எழுதிக்கொண்டோ, படித்துக் கொண்டோ இருக்கிற போது பக்கத்தில்

ஏதேனும் எரிந்து பொசுங்குவதைக் கவனிக்காமல் விட்டு விட்டால் அனைத்தும் தீய்ந்தல்லவா போய்விடும்.

நம் புலன் உணர்வுகள் அனைத்தும் எப்போதும் வேலை செய்து கொண்டுதான் இருக்கும்.

கை எழுதிக் கொண்டிருந்தாலும், மூளை எழுதுவதில் கவனம் செலுத்தினாலும் மூக்குக்கு முகர்ச்சி இல்லாமல் போய்விடாது. காதுக்குக் கேள்வி இல்லாமல் ஆகிவிடாது.

ஆக அந்த அந்த உறுப்புகள் இயல்பான உணர்தல் அறிவில் கூர்மையாக இயங்க வேண்டிய அளவில் நம் மூளையை நாம் பழக்குதல் வேண்டும்.

பெரும்பாலான விலங்குகள் எப்போதும் கவனமாகவே இருப்பதை நாம் பார்க்க முடியும்.

தூங்கிக் கொண்டிருந்தால்கூட, சில நுண்மையான ஒலிகளுக்கு, முகர்ச்சிகளுக்கு நாய் விழித்துக்கொள்வதை நாம் பார்த்திருப்போம்.

அறிவு வளர்ச்சி குறைந்தவை என்று எண்ணப்படுகிற விலங்குகளே அந்த அளவில் நுட்பமாக இருக்கிறபோது, நாம் அப்படி இருக்க வேண்டாமா?

நுண்ணறிவும், நுண்ணுணர்வும் நம் பழக்கத்திற்கேற்ப வளரும்.

நுண்மை அறிவை வளர்த்துக் கொள்ள வளர்த்துக் கொள்ள நம் அறிவு கூர்மையாகவும், ஒளி பொருந்தியதாகவும் இருக்கும். *

---

## எழுதாததால் பரிசு!

*பெர்னாட்சாவிற்கு இலக்கியத்திற்கான 'நோபெல்' பரிசு வழங்கப்பட்டது. அவ் விழாவில் பேசிய சா... "இந்த ஆண்டு நான் நூல் எதுவும் எழுதவில்லை. அதனைப் பாராட்டி இப் பரிசை உலகம் எனக்கு வழங்கியிருக்கிறது" — என்றார்.*

## பார்வைகள் பலவகை!

*அரசனைக் காணத் துறவியொருவர் வந்தார். அரசன் சிறிய வாயிற் படியொன்றின் வழியாகக் குனிந்து வரும்போது, தலையிடித்துக் கொண்டது. வலி பொறுக்காத அரசன் சினத்தோடு... துறவியைப் பார்த்து "உம்மைப் பார்த்ததால் எனக்குத் தலை இடித்துக் கொண்டது. எனவே உமக்கு கொலைத் தண்டனை கொடுக்கிறேன்" என்றான்.*

*"உன்னைப் பார்த்ததால் எனக்கு உயிரே போகிறதே" — என்று அரசனிடம் துறவி விடை யளித்தார். அவன் தன் தவற்றை உணர்ந்து துறவியின் கொலைத் தண்டனையை நீக்கினான்.*

# ஆழாக்கும் இழாக்கும்

***நினைவுக்கலை ஏந்தல் திருக்குறள் பெ. இராமையா அவர்கள் திருக்குறளில் ஆழ்ந்த புலமையுடையவர். அதோடு திருக்குறளில் பதின் கவனகம் எனப்படும் பத்துவகை நினைவு நிகழ்ச்சி (தசாவதானம்) நடத்துவதிலும் வல்லவர். கோவையில் ஒரு கல்விக் கூடத்தில் அவர் திருக்குறள் பதின்கவனக நிகழ்ச்சி நடத்திக் காட்டிய போது நிர்மலா என்ற மாணவிக்கும் அவருக்குமிடையே நடந்த உரையாடலைக் கீழே கொடுத்துள்ளோம். படித்துப் பாருங்கள்.***

**நிர்மலா:**

முந்நூற்று இருபதாவது குறளைத் தலை கீழாகக் கூறவேண்டும்.

இராமையா:

முந்நூற்று இருபதாவது குறளையா? சரி; சொல்கிறேன். உன் பெயர் என்ன?

நிர்மலா:

என் பெயர் நிர்மலா, ஐயா.

இராமையா:

நிர்மலாவா...ம்ம்.... உன் பெயரிற்குப் பொருள் தெரியுமா?

நிர்மலா:

பெயரிற்குப் பொருளா... (நே... என்று விழித்தபடி) தெரியாது ஐயா!

இராமையா:

(சிரித்தபடி) மலம் என்றால் என்ன என்றாவது பொருள் தெரியுமா? (மாணவியர் அனைவரும் சிரித்தல்; நிர்மலா நெளிதல்.)

''நான், பகடிசெய்து சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. கொஞ்சம் கவனமாகக் கேள். மலம் என்றால் கழிவு, அழுக்கு என்று பொருள். நிர்மலம் என்றால் கழிவற்றது, அழுக்கற்றது என்று பொருள்.

தூய்மையானவள் உனக்குப் பெயர் வைக்க விரும்பிய உன் பெற்றோர், தூய தமிழில் 'தூயவள்' என்றே வைத்திருக்கலாம். அதைவிட்டு வடமொழியில் பெயர்வைக்கப் போய் இப்படி மலமற்றவள், அழுக்கற்றவள் என்று

உன்னுடன் மலத்தையும் அழுக்கையும் ஒட்டவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இப்போது சொல். உனக்கு நிர்மலா என்ற பெயர் பிடித்திருக்கிறதா? தூயவள் என்று பெயர் பிடித்திருக் கிறதா?

*நிர்மலா:*

எனக்குத் தூயவள் என்ற பெயர்தான் பிடித்திருக்கிறது ஐயா.

(மாணவியரின் கையொலியில் மண்டபம் அதிர்ந்தது.)

**இராமையா:**

உன்மேல் தப்பில்லை. நம் நாட்டில் பெரும்பாலோர் தம் பெயரிற்குப் பொருள் தெரியாமல் வாழ்பவர்களே. அதனால்தான் தம் பிள்ளைகட்குப் பெயர் வைக்கும் போதும் அவர்கள் பொருள் பற்றிச் சிந்திப்ப தில்லை.

'பங்கஜம்' என்றால் சேற்றில் தோன்றியது என்று பொருள். அது புழுவாகவும் இருக்கலாம்; பூவாகவும் இருக்கலாம். ஏன் நேரடியாகத் 'தாமரை' என்று வைப்பது தானே! 'பூவராகன்' என்றால் நிலப்பன்றி என்று பொருள். இது தெரிந்தால் பூவராகன் என்று யாராவது பெயர் வைப்பார்களா?



இப்படிப் பொருள் தெரியாமல் பெயர் வைப்பதால் தான் பலருடைய வாழ்க்கை பொருளற்றதாகவே போய் விடுகிறது.

சரி, நீ கேட்ட 320ஆம் குறளைத் தலைகீழாய்ச் சொல்கிறேன். எழுத்து எழுத்தாய்ப் பார்.

"ர்வப டுண்வே மைன்யிநோ
ர்யாய்செய்நோ ம்வாலமே
ர்தாய்செய்நோ
ம்லால்யெநோ

நோயெல்லாம் நோய்செய்தார்
மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.
(320)

(மீண்டும் கையொலி)

— தொகுப்பு: செம்பி

✳

# வாழும் நெறி

புதுவை தமிழ்நெஞ்சன்

படிக்க படிக்க அறிவு வளரும்
அம்மா சொன்னாங்க . அப்பா
அம்மா சொன்னாங்க !

படித்ததோடு செயலும் செய்ய
அப்பா சொன்னாங்க . அம்மா,
அப்பா சொன்னாங்க !

தோல்வி கண்டு துவள வேண்டாம்
ஆசான் சொன்னாங்க . அறிவு
ஆசான் சொன்னாங்க !

அறிவு வளர்க்கும் சிந்தனைக் கதையை
பாட்டி சொன்னாங்க . தாத்தா
பாட்டி சொன்னாங்க !

எண்ணித் துணிந்து எதுவும் செய்ய
தாத்தா சொன்னாங்க . பாட்டி
தாத்தா சொன்னாங்க !

தீமை கண்டால் எதிர்க்கச் சொல்லி
அக்கா சொன்னாங்க . அண்ணா
அக்கா சொன்னாங்க !

கல்வியின் சிறப்பு கரும்பின் இனிப்பு
அண்ணா சொன்னாங்க . அக்கா
அண்ணா சொன்னாங்க !

வெல்லும் சொல்லை செயலாய் மாற்ற
மாமா சொன்னாங்க . அத்தை
மாமா சொன்னாங்க !

அறிவு அன்பு உழைப்பு வேண்டும்
அறிஞர் சொன்னாங்க — உலக
அறிஞர் சொன்னாங்க !

அறிஞர் சொன்ன சொல்லை நெஞ்சில்
தாங்கிக் கொண்டேங்க — அதுபோல்
வாழப் போறேங்க !

---

**தமிழ்ச்சிட்டு வெளியீட்டு உரிமை அறிக்கை !**
**(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச்சட்டம் – 1956)**
**19–ஈ.ஆ.(வகுப்பு 8ஆம் கட்டளைப்படி)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | | : சென்னை |
| 2. | காலமுறை | | : மாதம் ஒரு முறை |
| 3. | அச்சிடுவோர் | பெயர் | : திருவாட்டி மா. தாமரை (எ) மா. கமலம் |
| | | இனம் | : தமிழர் |
| | | முகவரி | : தென்மொழி அச்சகம், சென்னை – 601 302. |
| 4. | வெளியிடுவோர் : | பெயர் | : திருவாட்டி மா. தாமரை |
| | | இனம் | : தமிழர் |
| | | முகவரி | : தென்மொழி அச்சகம், சென்னை – 601 302. |
| 5. | ஆசிரியர் பெயர் | | : திருவாட்டி மா. தாமரை சென்னை – 601 302. |
| | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் : | | : திருவாட்டி மா. தாமரை |

மா. தாமரையாகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

10–04–2002
சென்னை – 601 302.

**மா. தாமரை**
(ஒப்பம்)

# அச்சமா அப்படியென்றால்?

நள்ளிரவு ஆனால் நிலவுக்காலம். தூக்கத்தினின்று விழித்துக் கொண்டாள் அந்தத் தாய். தன்னருகே உறங்கிய மகனைக் காணாது துணுக்குற்றாள். அவன் செல்லுமிடமெல்லாம் தேடினாள். இறுதியில் காட்டின் நடுவில் உள்ள குளக்கரையில் மகனைக் கண்டாள். மகிழ்ச்சி கொண்டாள்.

தாய் வந்ததைக் கூட உணராது அவன் குளத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்! "மகனே, தனியாக இந்த இரவு நேரத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" — என்றாள்.

"நிலவொளியில் மீன்கள் துள்ளிக் குதிப்பதையும், நீர்வட்டங்கள் பெருகிப் பெருகி அலை அலையாகிக் கரையில் மோதுவதையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" —என்றான்.

"நீ தனியாக இந்தக் காட்டில் இருக்கிறாயே, உனக்கு அச்சமாக இல்லையா?"

"அச்சமா அப்படியென்றால் என்னம்மா?" என்றான் எட்டு அகவை நிரம்பிய அந்தச் சிறுவன். "ஒன்றுமில்லை" என்று சொல்லி அவள் அவனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினாள்.

அச்சமற்ற அந்தச் சிறுவனே பிற்காலத்தில் வரலாற்று நாயகனாக விளங்கிய நெப்போலியன் ஆவான்.

அச்சம் என்பது மடமை - அஞ்சாமை என்பது அறிவுடைமை.

ஆனால், வள்ளுவர்,

அஞ்சுவது அஞ்சாமை<br>
பேதைமை அஞ்சுவது<br>
அஞ்சல் அறிவார்<br>
தொழில்.. என்பார்..

## மடத் தலைவனுக்கு மான வினா

"அமெரிக்காவின் விண்வெளிக்கலம் நிலவில் இறங்கியிருப்பது சாதனை யில்லையா?" என்று சங்கராச்சாரியிடம் செய்தியாளர்கள் கேட்டார்கள்.

உண்ண உணவும் உடுக்க உடையும், தங்க நிழலும் இன்றி உலகில் மக்கள் தொல்லைப்படும் போது வேற்றுக் கோளுக்குச் செல்லக் கோடிக் கணக்கில் செலவழிப்பதால் என்ன பயன்? என்றாராம் சங்கராச்சாரி.

அப்படியானால்... கல்லுக்கும் செம்புக்கும்... குடிக்க வேண்டிய பாலை ஊற்றுவதும், உணவான தேன், நெய்யால் குளிப்பாட்டுவதும்.. திருப்பதி கோயிலுக்குத் தங்க - வயிரப் பூணூலும் நாமமும், கருடனை வயிரத் தங்கத்திலும், தேரை வெள்ளியிலும் செய்து இருப்பது எப்படி? பசிக்கும் ஏழைக்கும் இளைஞர்களுக்கும் தொழிலகம் தொடங்காமல் இப்படிப் பணத்தை சங்கராச்சாரி செலவழிப்பது சரியா?

# விண்வெளிச் செலவு

விண்வெளியில் நெடுந் தொலைவிற்குச் செல்வது மாந்தனின் கனவாகவே இருந்து வந்தது. ஏனெனில் காற்று மண்டலத்திற்கு அப்பால் காற்றே இல்லாத இடத்தில் வானூர்தி பறக்க முடியாது. நாளடைவில் ஏவுகணைகள் உருவாக்கப் பட்டதும் விண்வெளிக்குச் செல்வது நடந்தது.


நீர்ம எரிநீரும், நீர்ம நிலைக்கு மாற்றப்பட்ட உயிர்வளி (ஆக்சிசன்) கலந்த கலவையை எரியச் செய்து எழுப்பப்படும் உந்துவிசையைக் கொண்டு ஏவுகணைகளை மிக விரைவாகச் செலுத்தலாம் என்று உருசியாவில் சியோல் கோவிசுகி என்பவரும், செருமனியில் ஒபொர்த்து என்பவரும் அமெரிக்காவில் கோடார்டு என்பவரும் கண்டுபிடித்தனர். கோடார்டு 1935இல் வானத்தில் 2,300 அ.மா.(கிலோ மீட்டர்) உயரத்திற்கு ஏவுகணைகளைச்ச செலுத்தினார். அவை மணிக்கு 1,100 அ.மா. (கிலோ மீட்டர்) விரைவில் சென்றன.

நிலத்திலிருந்து செலுத்தப்படும் ஏவுகணை உலகின் கவர்ச்சி விசையிலிருந்து விடுபட்டு, விண்வெளியில் செல்வதற்குத் தொடக்க நிலையில் மணிக்குக் குறைந்தது 40,000 அயிர மாத்திரி வேகத்தில் செலுத் தப்பட வேண்டும். இவ்வாறு மிகு வேகத்தில் செல்லும்போது வளி மண்டலத்தின் உராய்வு உண்டாகும். கைகளைத் தேய்த்தால் வெப்பம் உண்டாகிற தல்லவா, அதுபோல உராய்வு ஓர் அளவுக்கு மேல் அதிகமாகி விட்டதால், வெப்பம் மிகுதியாக உண்டாகி, ஏவுகணை எரிந்து விடும். அவ்வாறே, வான வெளியிலிருந்து திரும்பிவரும் ஏவுகணை வாயுமண்டலத்தில் நுழையும் பொழுதும் ஏற்படும் உராய்வினால் எரிந்து போகக் கூடும். உராய்வினால் எரிந்து போகாத வகையில் ஏவு கணையை வடிவமைக்கவும், இயக்கவும் அறிஞர்கள் வழி வகுத்தார்கள். 1957 அத்தோபர் 4இல் 'சுபுட்னிக்' 1 என்னும் செயற்கைக் கோள் ஒன்றை உருசியா வான் வெளியில் பறக்கவிட்டது. இது நிலவைப் போல ஒரு துணைக் கோளாக உலகைச் சுற்றி வந்தது. ஒரு முறை உலகைச் சுற்றிவர 90 நிமையங்கள் ஆயின.

மீண்டும் 1957 நவம்பர் 3இல் உருசியா பறக்கவிட்ட 'சுபுட்னிக் 2' என்ற செயற்கைக் கோளில் 'இலைக்கா' என்ற நாயை வைத்து அனுப்பினர்; அது எச்சரிக்கையாக உலகுக்குத் திரும்பியது. சுபுட்னிக் 2 விண்வெளியைச் சுற்றிவரும் போதே, நாயின் நெஞ்சத் துடிப்பையும், மூச்சையும் பதிவு செய்தார்கள். இந்த ஆய்வுகளால் விண்வெளிச் செலவிற்கு மாந்த உடல் ஏற்றது தான் என்பது

தெரியவந்தது. உருசியாவைத் தொடர்ந்து அமெரிக்காவும் 1958 சனவரி 31இல் 'எக்கசுபுளோரார்' என்ற தன் முதல் செயற்கைக் கோளை வானத்தில் பறக்கவிட்டது.

நாம் வாழும் உலகம் நொடிக்கு 29.7 அ.மா. விரைவில் கதிரவனைச் சுற்றி வருகிறது. இந்த விரைவை நமது உடல் தாங்கிக் கொள்கிறது. ஆனால் இந்த விரைவில் திடுமென மாறுதல்கள் ஏற்படும் போது என்ன நேரும் என்பது தெரியாமலிருந்தது. உலகிலிருந்து புறப்படும் போது ஏற்படும் கடும் விரைவின் போதும், உலகைச் சுற்றும்போதும் ஏற்படும் எடையின்மையின் போதும் விண்வெளி யாளர்களின் உயிருக்குத் தொல்லை ஏற்படாத வகையில் கருவிகளை அமைப்பதில் பொறியியல் வல்லுநர்கள் ஈடுபட்டார்கள். வேகம் அதிகப்படும் போதும், வேகம் குறையும்போதும் உடலின்மீது பெருமளவு அழுத்தம் உண்டாகிறது என்பதைக் கண்டு அதை ஈடுசெய்ய வழிவகைகளை வகுத்தார்கள்.





விண்வெளி வீரர்களின் உடை அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் அமைக்கப்படுகிறது. முகாமையாக அதனுள் உயிர்வளி வைக்கப்படும். விண் வெளியர் வளி மண்டலமே இல்லாத நிலவில் இறங்கும் பொழுது அவர்களுடைய உடுப்புக்குள்ளிருக்கும் காற்று ஊதி வெடிக்காதவாறு பாதுகாக்கப் பட்டிருக்கும். நிலவில் பகல் நேர வெப்ப நிலை 100° வரை உயர்ந்திருக்கும். இரவில் வெப்ப நிலை 132° வரை தாழ்ந்து கடும் குளிராக இருக்கும். முற்றிலும் மாறுபாடான இந்தத் தட்பவெப்ப நிலையைத் தாங்கிக் கொள்வதற்கு ஏற்றவாறு வானியலார்களின் உடை அமைக்கப் பட்டிருக்கும்.

இதன்பின், விண்வெளிக் கலத்தில் மாந்தனை வைத்து விண் வெளிக்கு அனுப்பி, மீண்டும் உலகுக்குக் கொண்டு வரும் வழிகளைக் காண்பதில் அறிஞர்கள் ஈடுபட்டனர். இதில் முதலில் வெற்றி பெற்றவர்கள்

உருசியர்களே. அவர்கள் 1961 ஏப்பிரல் 12இல் ஊரிகுகாரின் என்பவரை விண்கலத்தில் வைத்து விண்வெளிக்குச் செலுத்தினர். அவர் சென்ற கலம் உலகிலிருந்து ஏறத்தாழ முந்நூறு அ.மா.(கிலோ மீட்டர்) உயரம் சென்று உலகை 108 நிமையத்தில் ஒரு முறை சுற்றிவிட்டு மீண்டும் தரைக்குத் திரும்பி வந்தது. இதன்பின் ஒரு மாதத்திற்குள் அமெரிக்காவும் ஆலன் செப்பார்டு என்பவரை விண்வெளியில் அனுப்பி வெற்றி கண்டது. தொடர்ந்து உருசியாவும் அமெரிக்காவும் பலமுறை விண்வெளி வீரர்களை விண் வெளிக்கு அனுப்பி வெற்றி கண்டன.


நிலவுக்கு மாந்தனை அனுப்பும் முயற்சியில் உருசியா, அமெரிக்கா இரண்டு நாடுகளும் முனைப்பாக ஈடுபட்டன. உருசியர்கள் உலூனா என்ற விண்கலங்களைச் செலுத்தி நிலவைப் பற்றிய பல செய்திகளைத் தொகுத்தனர். உலூனாகார்ட்டு எனும் தானியங்கி ஊர்தியை நிலவுக்கு அனுப்பி, இயங்கச் செய்து புதிய விளக்கங்களைப் பெற்றன. மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் சார்டன் - 5 என்ற ஏவுகணையுடன் இணைக்கப் பட்டிருந்த விண்கலத்தில் 1968 திசம்பர் 21இல் உலகை விட்டுப் புறப்பட்டனர்; 24இல் நிலவை நெருங்கி 111 அ.மா. தொலைவில் நிலவை 10 முறை சுற்றிவிட்டு திசம்பர் 27இல் உலகிற்குத் திரும்பினர்.



விண்வெளி செல்ல பயன்பட்ட சார்டன் - 5 ஏவுகணை மூன்று கட்டங்களாக இயங்கியது. அது மேலே ஏவப்பட்ட பிறகு இரண்டரை நொடிகளில் அதன் முதல் கட்டப் பகுதி கீழே விழுந்துவிடும். இரண்டாம் கட்டப் பகுதி இயங்கத் தொடங்கி 4,50,000 அயிர எடை உந்து விசையை அளிக்கும். அடுத்த ஆறரை விநாடிகளுக்குப் பிறகு இரண்டாம் பகுதியும் விழுந்து விடும். மூன்றாம் கட்டப் பகுதியாகிய அப்பல்லோ விண் வெளிக் கலம் 90,700 அயிர எடை உந்துவிசையுடன் விண் வெளியில் பறக்கும். இது தன் சுற்று வட்டப் பாதையைச் சேர்ந்தவுடன் ஏவுகணை வேலை செய்யாமல் நின்று விடும். இப்பகு,

எடையற்ற நிலையில் உலகைச் சுற்றி ஓடத் தொடங்கும். குறிப்பிட்ட நேரத்தில் இதன் பொறிகள் இயங்கத் தொடங்கும். மணிக்கு 38,880 அ.மா. வேகத்தை எட்டி உலகின் ஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டு நிலவை நோக்கி பறக்கத் தொடங்கும். நிலவை நெருங்கும் பொழுது இதன் வேகம் மணிக்கு 4,800 அ.மா.யாக குறையும். இந்த நிலையில் ஏவுகணை மீண்டும் வேலை செய்யாமல் நின்றுவிடும்.

நிலவுக்கு மாந்தனை அனுப்புவதில் முதல் வெற்றி அமெரிக்காவுக்குக் கிடைத்தது. 1969 சூலை 16இல் நீல் ஆர்ம்சுட்ராங்கு, எட்வின் ஆல்ட்ரின், மைக்கேல் காலின்சு ஆகிய மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் அப்பல்லோ 11 என்னும் விண்வெளிக் கலத்தில் நிலவுக்குப் புறப்பட்டனர். அக்கலம் நிலவின் சுற்றுப் பாதையை அடைந்ததும் காலின்சு 'ஆணைக்கூட்டில்' இருந்து கொண்டு சுற்றுப் பாதையில் சுற்றிக்கொண்டிருந்தார். ஆர்ம்சுடிராங்கு, ஆல்டிரின் இருவரும் நிலவுக் கூட்டினுள் இறங்கினர். அக்கூடு, ஆணைக் கூட்டினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு, சூலை 20இல் நிலவில் தரை இறங்கியது. முதலில் ஆர்ம்சுடிராங்கும், அடுத்து ஆல்டிரினும் நிலவில் அடியெடுத்து வைத்து, ஏறத்தாழ 22 மணி நேரம் தங்கிப் பல ஆய்வுகளை நடத்தினார்கள்.



ஆய்வுகளை நடத்திய பின்னர் இருவரும் மீண்டும் பழையபடியே நிலவுக் கூட்டில் ஏறி அமர்ந்தார்கள். ஏவுகணை விசையால் மேலேறி, அங்குச் சுற்றுப் பாதையில் காலின்சுடன் வலம் வந்து கொண்டிருந்த ஆணைக்கூட்டை நெருங்கி, அதனுடன் தம் கூட்டை இணைத்துக் கொண்டார்கள். இணைப்பு ஏற்பட்டதும் ஆர்ம்சுடிராங்கு, ஆல்டிரின் இருவரும் நிலவுக் கூட்டைக் கைவிட்டு, ஆணைக் கூட்டினுள் ஏறிக் கொண்டார்கள். பிறகு நிலவுக் கூடு ஆணைக்கூட்டினின்றும் கழன்று தனியாக நிலவைச் சுற்றி ஓடத் தொடங்கியது. ஆணைக் கூட்டை மட்டும் கொண்ட அப்பல்லோ

விண்வெளிக்கலம் தன் ஏவு கணைகளை இயக்கி, நிலவின் ஈர்ப்பு விசையிலிருந்து விடுவித்துக் கொண்டு மூன்று வீரர்களுடனும் உலகை நோக்கி விரைந்தது. அது உலகை நெருங்க நெருங்க அதன் வேகத்தை அதிலிருந்த வீரர்கள் குறைத்துக் கொண்டனர்.

இறுதியில் அக்கலம் பசிபிக்கு கடலில் வந்து காற்று ஊதிகளின் உதவியால் மெல்ல இறங்கியது.

இதைத் தொடர்ந்து அப்பல்லோ - 12, அப்பல்லோ - 14, அப்பல்லோ - 15, அப்பல்லோ - 16, அப்பல்லோ - 17 ஆகிய விண்வெளிக் கலங்களில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் நிலவுக்குச் சென்று திரும்பியுள்ளனர்.

அப்பல்லோ - 15இலும், அதன் பின்னும் சென்ற வீரர்கள் தங்களுடன் 'உரோவர்' என்னும் ஊர்தியையும் கொண்டு சென்றனர். இதில் அவர்கள் நிலவின் பரப்பில் நெடுந்தொலைவு சென்று ஆய்வுகள் நடத்தினார்கள்.

விண்கலம், நிலவுக்குச் செல்லும் போதும் வரும்போதும், நிலவில் விண் வெளிவீரர்கள் தங்கியிருக்கும் போதும் அவர்கள் உலகில் உள்ள நிலையத்துடன் இடைவிடாது தொடர்பு கொண்டிருப்பார்கள்.

ஆற்றல் வாய்ந்த வானொலி, தொலைக் காட்சிக் கருவிகள் இதற்கு உதவுகின்றன. நிலவில் விண் வெளி வீரர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தையும் உலகிலிருந்தே தொலைக் காட்சியில் பார்க்க முடியும்.

அப்பல்லோ -13இல் பழுது ஏற்பட்டு விண்வெளியில் திசை தவறிச் சென்றபோது, தரையிலிருந்த அறிஞர்கள் தம் திறமையால் அதைப் பாதுகாப்பாகத் தரை யிறக்கினார்கள்.

உருசியர்கள் ஏற்கெனவே மார்சு - 1 என்ற விண் வெளிக்கலத்தைச் செவ்வாய்க்கும், வீனசு - 1, வீனசு - 2 என்ற கலங்களை வெள்ளிக்கும் செலுத்தியுள்ளனர் (1960).

அமெரிக்கர்கள் அனுப்பிய (1962) மாரினர் - 2 என்னும் கலம் வெள்ளியை நெருங்கிற்று. மாரினர் - 4 என்ற கலத்தை (1964) அமெரிக்கா செவ்வாய்க்கு அனுப்பியது. அது 228 நாள்களில் உலகிலிருந்து 21.4 கோடி அ.மா.(கிலோ மீட்டர்) தொலைவு சென்று, செவ்வாய்க்கு அருகிலிருந்து படம் எடுத்து அனுப்பியது. மாரினர் - 5 என்ற அமெரிக்கக் கலம் (1967) வெள்ளியை 3,968 அ.மா. (கிலோ மீட்டர்) தொலைவில் நெருங்கி அறிவியல் செய்திகள் பலவற்றை அனுப்பியது. செவ்வாய், வெள்ளி முதலிய கோள்களுக்கு மாந்தனை அனுப்புவது குறித்தும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

⊙


## மொறிக்கக் காஞ்சம் சய்திகள்

- பிரெஞ்சு ஆட்சி இருந்த போதே அவர்களிடமே வேலை செய்துகொண்டு தமிழில் கையொப்பமிட்டவர் ஆனந்தரங்கம்.
- பெண்களுக்குக் கட்டாயக் கல்வி வழங்கும் நாடு பிரிட்டன்.
- ஆமைகளுக்குப் பற்கள் இல்லை. முதலைக்கு நாக்கு இல்லை. வாய் இல்லாத பூச்சியினம் வண்ணத்துப்பூச்சி
- தம் வாழ்நாளில் ஒரு திரைப்படம் கூடப் பார்க்காதவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க.
- மோனாலிசா ஓவியம் வரைந்தவர் இலியோனார்டோ டா வின்சி.
- தீப்பெட்டியில் உரசும் பகுதியில் உள்ளது சிவப்புப் பாசுபரசு.
- கடலில் இடியோசை கேட்காது
- ஆண் யானைக்குத்தான் மதம் பிடிக்கும்..
- காசுகளை முதன்முதலில் உலகில் அறிமுகப்படுத்திய நாடு கிரேக்கம்.

## மொறிக்கக் காஞ்சம் சய்திகள்

- காது கேளாதவர்க்கான கல்விமுறையை உருவாக்கிய நாடு. இசுபெயின்
- சோசபு பெசுகி என்ற தம் பெயரைத் தம் தைரியநாதர் என்று மாற்றிக் கொண்டவர், அது சமற்கிருதம் என்று தெரிந்தபின் தமிழில் வீரமா முனிவர் என்று மாற்றிக் கொண்டார்.
- குமரிமுனையில் 133 அடி திருவள்ளுவர் சிலையை வடிவமைத்த சிற்பி கணபதிப் பெருந் தச்சர்.
- ஒற்றைத் தண்டவாளத்தில் செல்லும் தொடர்வண்டிக்கு தனியன்(மோனோ) என்று பெயர்.
- முதன்முதலில் தமிழில் வெளிவந்த மாத வெளியீடு — தமிழ்த்தாள்.
- ஓவியர் இரவிவர்மாவின் குரு மதுரை இராமசாமி.
- கொசுவுக்குப் பிடிக்காத வண்ணம் மஞ்சள்.

*



- பிறந்ததிலிருந்து இறப்புவரை நம் உடலில் எந்தவகையான வளர்ச்சியும், மாற்றமும் அடையாத உறுபபு... கண்.
- ஆவின் பால் வெளிர் மஞ்சள் வண்ணத்தில் காணப்படுவதற்குக் காரணம் 'கரோட்டீன்' என்ற பொருள் பாலில் இருப்பதால்.
- நீர்மத் தங்கம் எனப்படுவது கன்னெய் (பெட்ரோலியம்)
- சிலந்திக்கு எட்டுக் கால் உண்டு... கண்ணும் எட்டுதான். மேலும் கீழுமாக இரண்டு வரிசையில் நான்கு நான்காக அமைந்திருக்கும்.
- உலகெங்கும் இரவும், பகலும் ஒரே அளவாக இருக்கும் நாட்கள் செபுதம்பர் 23, மார்ச்சு 21.
- வண்ணக் குருடு உடையவர்களால் பிரித்துச் சொல்ல முடியாத வண்ணங்கள் சிவப்பு, பச்சை.
- ஆந்தை மட்டுமேதான் கழுத்தை (260 பாகை கோணத்தில்) முழு வட்டப் பாதையில் சுழற்றித் தன் முதுகுப் பக்கத்திலும் கண்களைக் கொண்டு செல்லும் அமைப்பு உடையது.
- மழை வருதற்கு முன் காற்றில் ஈரப்பசை அதிகமாகிவிடுவதால் நம் உடலில் வியர்வை ஆவியாவதில்லை. எனவே மழை வருதற்கு முன் உடலில் புழுக்கம் ஏற்படுகிறது.


☞ உலகப் பொதுமறையான திருக்குறளில் 14000 சொற்களும் 42,194 எழுத்துகளும் உள்ளன.


☞ பூனைக்கு நிற வேறுபாடு தெரியாது. எல்லாமே கறுப்பு வெள்ளையாகத்தான் தெரியும்.



☞ நாற்பது மின்மினிப் பூச்சிகளின் ஒளி ஒரு மெழுகுத் திரி ஒளிக்குச் சமம்.

☞ உலகிலேயே மிக விரைவாகத் தரையில் ஓடக் கூடிய விலங்கு சிறுத்தை. நீந்தக் கூடியது கடல் அரிமா (கடல் சிங்கம்).





☞ யானையின் துதிக்கையில் நாற்பதினாயிரம் தசைகள் உண்டு. ஓர் எலும்புகூட இல்லை.

☞ முதன்முதலில் தடுப்புஊசி நெப்போலியனின் படைப்பிரிவில் உள்ளவருக்குத்தான் போடப்பட்டது.

☞ முகில்களில் நான்கு வகை உண்டு. கொடி முகில், குவியல் முகில், அடுக்கு முகில், கார்முகில் என்பன.

# தமிழ்வழிக் கல்விக் கழகப் பள்ளிகளின் ஆண்டு விழாக்கள்

**பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி – குன்றத்தூர்**

குன்றத்தூர்ப் பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளியின் எட்டாம் ஆண்டு நிறைவு விழா தி.பி. 2033 மீனம் 10 அன்று (24.03.2002) மாலை, திரு. இறை. பொற்கொடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. வெற்றிச்செழியன் வரவேற்றார். முனைவர் ச. கிருட்டிணமூர்த்தி, திரு. ஆ. கைலாசநாதன், திரு. குழந்தைவேலு முதலானோர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பாவலரேறு தமிழ்வழிப் பள்ளி - கல்பாக்கம்**

கல்பாக்கம் பாவலரேறு தமிழ்வழிப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு விழா கடந்த மீனம் 15 அன்று (29.03.2002) மாலை நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் கே. ஆறுமுகம், திரு. இரா. அருணாசலம், திரு. மாந்தநேயன், திரு. தமிழ்க்கண்மணி முதலானோர் வாழ்த்தி உரையாற்றினர்.

**திருவள்ளுவர் தமிழ்வழிப் பள்ளி - அடையாறு**

சென்னை - அடையாறு திருவள்ளுவர் தமிழ்வழிப் பள்ளியின் பதினோராம் ஆண்டு நிறைவு விழா கடந்த மீனம் 17 அன்று (31.03.2002) மாலை, முனைவர் கு. இராமாத்தாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. இறை. பொற்கொடி வரவேற்றார். திரு. மலர்க்கொடி சுகுமாரன், திரு. நாயகம், திரு. அ. மதிவாணன், திரு. தமிழினியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**மறைமலையடிகள் தமிழ்வழிப் பள்ளி - பீர்க்கங்கரணை**

பீர்க்கங்கரணை மறைமலையடிகள் தமிழ்வழிப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா, கடந்த மீனம் 23 அன்று (06.4.2002) மாலை, திரு. இறை. பொற்கொடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. பாலகிருட்டிணன் வரவேற்றார். புலவர் இறைக்குருவனார், திரு. தெ.பொ. இளங்கோவன், புலவர் இரா. கிருட்டிணன், திரு. இரா. மல்லிகா, திரு. மே. கோவிந்தராசு, திரு. இரா. கோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**பாவாணர் தமிழ்வழிப் பள்ளி - பள்ளிக்கரணை**

பள்ளிக்கரணைப் பாவாணர் தமிழ்வழிப் பள்ளியின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா கடந்த மீனம் 24 அன்று (07.04.2002) மாலை, திரு. வே. காமராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. மாந்தநேயன் வரவேற்றார். திரு. வலம்புரிசான், முனைவர் கு. அரசேந்திரன் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

**பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி - சிக்கராயபுரம்**


குன்றத்தூர் - சிக்கராயபுரம் பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளியின் முதலாண்டு நிறைவு விழா, கடந்த மீனம் 24 அன்று (07.04.2002) மாலை, புலவர் பா. குளுந்தநாயகி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. வெற்றிச்செழியன் வரவேற்றார். திரு. சி.மா.இரா. குமார், திரு. சி.க.கோ. நாராயணன், திரு. து. செயபாலன், திரு. மா. முருகன் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

**குறிப்பு:** அனைத்துப் பள்ளிகளிலும் மாணாக்கரின் பல்வகைக் கலைநிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன. திருக்குறள் திறன் பாராட்டத்தக்க வண்ணம் அமைந்திருந்தது. மாணாக்கர்களும் ஆசிரியர்களும் பரிசளித்தும் பாராட்டியும் சிறப்பிக்கப் பெற்றனர்.

# [illegible]

ெசன்னை திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளி ஆண்டுவிழாவில் தமிழ்நாட்டு அரசுத் தேர்வாணைக்குழு உறுப்பினர் திருவாட்டி இராமாத்தாள் அவர்கள் தம் தலைமையுரையில் சுவையான நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிட்டார்கள்.


ஒரு கல்வி அதிகாரியுடன் சிற்றூர் ஒன்றில் தமிழ் வழிக்கல்வியாக இயங்கும் மழலையர் பள்ளி ஒன்றிற்குச் சென்றிருக்கிறார்கள். அங்கு ஆசிரியர், உலகில் உள்ள உயிரின வகைகளைப் பற்றி மழலை மாணவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது ஆசிரியர் இடையில் தம் கருத்தாக, உலகில் உள்ள அனைத்து



ஊர்வன, நீந்துவன, பறப்பன முதலாக மாந்தர்வரை அனைத்தும் இறைவன் படைத்தவை என்று கூறியிருக்கிறார்.

உடனே ஒரு குழந்தை எழுந்து 'ஐயா, பறப்பன வெல்லாம் இறைவன் படைத்தது என்றால் விண்ணூர்தியைப் படைத்தது யார்? என்று கேள்வி ஒன்றை எழுப்பியிருந்திருக்கிறது.

ஆசிரியர் இது போன்றதொரு கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்காததால் ஒரு நிமையம் திணறி விட்டார். அவர் விடை சொல்ல அணியமாகிக் கொண்டு இருக்கும் போதே இன்னொரு குழந்தை எழுந்து



"இதற்கு நான்விடை கூறட்டுமா?" என்று கேட்டிருக்கிறது.

'சரி' என்று ஆசிரியர் கூற உடனே அந்தக்குழந்தை, "இறைவனால் படைக்கப்பட்ட மாந்தனால் விண்ணூர்தி படைக்கப்பட்டது" என்று கூறியிருந்திருக்கிறது.

இப்படியொரு பாடப்பகுதிக்கு அப்பாற்பட்ட இக் கருத்து எவ்வாறாயினும், பறப்பனவற்றோடு விண்ணூர்தியை ஒப்பிடுவதற்கும் அக்குழந்தைகள் புரிந்துகொண்டு உரியநேரத்திலேயே எதிர்க் கேள்வியையும் எழுப்புதற்குமான அக்குழந்தைகளின் புரிதலறிவையும் ஆசிரியருடன் மாணவர்களும் தாராளமாகக் கலந்து பேசித் தற்சிந்தனையை வளர்த்துக் கொள்ளும் தயக்கமில்லாப் போக்கையும் கண்டு அந்த அம்மையார் மகிழ்ந்திருந்தார் 'அதே வேளையில் கல்வி அதிகாரி' 'இதே ஊரில் கொடுஞ்சிறைச்சாலை ஒன்றுள்ளது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டுள்ளார்.



அதற்கு அம்மையார் 'அப்படியா எனக்குத் தெரியாதே!' என்று வியந்து கூறியுள்ளார்.

அருகில் இருப்பதாகக் கூறி அக்கல்வி அதிகாரி அழைத்துச் சென்றிருக்கிறார். பிறகுதான் தெரிந்திருக்கிறது அது ஒரு தகுதி நிலைப்பள்ளி (Matriculation School) என்றும் அதைத்தான் அவ்வாறு கொடுஞ்சிறை என்று கூறியிருக்கிறார் என்றும் புரிந்தது. அங்குள்ள மழலையர் பள்ளிப் பக்கம் சென்றிருக்கின்றனர்.

அங்குக் கழுத்துப்பட்டை, காலை இறுக்கிய மூடணியுடன் அமர்ந்திருந்த மாணவர்கள் தங்கள் ஆசிரியை எழுப்பும் ஒலியை எதிரொலித்துக் கொண்டிருந்தனர்.

குழந்தைகளுக்கு ஏற்படும் அனைத்து உணர்வுகளையும் ஒழுங்கு என்ற பெயரில் கட்டுப்படுத்திக் கொண்டு எந்திர மாந்தர்களாக அமர்ந்திருந்தனர்.

இந்த இரண்டு பள்ளிக்குழந்தைகளின் வேறுபாட்டையும் தெளிவாக அங்கே உணர முடிந்தது. கல்வி அதிகாரி கூறிய கொடுஞ்சிறைச்சாலைக்குப் பொருள் புரிந்தது.

தனித்தியங்கும் தன்மை தமிழினுக்கும் உண்டு; தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழனுக்கும் உண்டு.

அடிமைபடுத்தும் இயல்பு ஆங்கிலர்க்கும் உண்டு. அதை இன்னும் நாம் நம்பிக் கொண்டிருப்பதால் ஆங்கிலத்துக்கும் உண்டு.

த.நா. தலைமை அஞ்சலகத் [illegible]
T.N. Cheif P.M.G 645/2001 தமிழ்ச்சிட்டு

# பழமொழிகள்

பழமொழிகள்பழமொழிகள்பழமொழிகள்
பழமொழிகள்பழமொழிகள்பழமொழிகள்
பழமொழிகள்பழமொழிகள்பழமொழிகள்
பழமொழிகள்பழமொழிகள்பழமொழிகள்
பழமொழிகள்பழமொழிகள்பழமொழிகள்

* துருப்பிடித்துத் தேய்வதைவிட உழைத்துத் தேய்வதே மேல்
  — வேல்சு.

* செயல்தான் புகழ் பரப்பும், வாய் அன்று.
  — அயர்லாந்து.

* மாந்தனின் நெஞ்சுறுதி மலைகளையும் உடைத்துவிடும்.
  — அரேபியா

* குழந்தைக்கு முதற் பாடம் துணிவு.
  — இங்கிலாந்து

* நம் பகைவனே நம்மை அறிவாளியாக்குகிறான்.
  — இத்தாலி

* நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்
  — இத்தாலி

* நன்றாகத் தொடங்கிய வேலை பாதி முடிந்ததற்குச் சமம்.
  — கிரேக்கம்

* இரண்டு முயல்களை விரட்டினால், ஒருமுயலைக் கூடப் பிடிக்க முடியாது.
  — கொரியா

* அன்பை வாங்கவும் முடியாது; விற்கவும் முடியாது. அன்பிற்கு விலை அன்புதான்.
  — சீனா

* இன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் இரண்டு மடங்காகும்.
  — தென்மார்க்கு

* சட்டைப் பையிலுள்ள பூந்தோட்டத்தைப் போன்றது பொத்தகம்.
  — பாரசீகம்.

* உன் தாய்மொழி மதிக்கப்படுவது இல்லையென்றால் உன் குரல்வளை நெரிக்கப்படுகிறது என்று பொருள்.
  — பிரான்சு.

* ஒருபக்கம் கேட்டால் இருள்; இருபக்கம் கேள்... வெளிச்சமாகும்.
  — பெர்சியன்.

* அறிவாளி தனக்குள்ளேயே எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான். முட்டாள் எதற்கும் பிறரையே எதிர்பார்க்கிறான்.
  — பெல்சியம்